செ.வெ.எண்: 98/2017 நாள்: 06.02.2017

# செய்தி குறிப்பு

## முன்னாள் படைவீரருக்கு காவலர் வேலைவாய்ப்பு

சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தால் இரண்டாம் நிலை காவலர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விளம்பரம் 23.01.2017 நாளிட்ட தினத்தந்தி தினசரி நாளிதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள 15,664 காலியிடங்களில் 5 விழுக்காடு முன்னாள் படை வீரர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியில் சேர்ந்திட படையை விட்டு விலகி 3 ஆண்டு காலம் நிறைவு செய்யாதவர்கள் மற்றும் 45 வயதிற்கு மேற்படாதவர்கள் உடனடியாக விண்ணப்பித்து பயனடையுமாறு அறிவுறுத்தபடுகிறது. விண்ணப்பிக்க வேண்டிய கடைசி தேதி 22.02.2017 ஆகும்.

உரிய விண்ணப்ப படிவம் தபால் அலுவலகங்களில் கிடைக்கும் இது குறித்து அனைத்து தகவல்கள் மற்றும் படிவங்கள் கிடைக்கும் தபால் நிலையங்களின் விவரம் www.tnusbrb.tn.gov.in என்ற இணையதளத்தில் பார்த்து அறிந்து கொள்ளவும். காவலர் பணிக்கு விண்ணப்பம் செய்துள்ள முன்னாள் படை வீரர்கள் விண்ணப்பித்த விவரத்தை உடனடியாக முன்னாள் படை வீரர் நல அலுவலகத்தில் நேரிலோ, தொலைபேசி வாயிலாகவோ (தொ.எண்.04652-243515) தெரிவித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாய்ப்பினை பயன்படுத்திடுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவான்.இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

துணை இயக்குநர் மாவட்ட ஆட்சித்தலைவர்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.